

சேலம் மாவட்டம், வாழப்பாடி தேர்வு நிலை பேரூராட்சியில் ரூ.8.7 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம், நவீன காய்கறி சந்தையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சுற்றுலா துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.இவ்விழாவில் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் , கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் நே.பொன்மணி, உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும்

# திராவிட மாடல் நாயகர் முதல்வர் பிறந்த நாளை சிறப்புடன் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

மயிலாடுதுறை. பிப்.24

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மயிலாடுதுறை மாவட்டக்கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் பேசினார்.

கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என். விஜயபாலன், எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், கண்ணகிபன்னீர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்லசேது.ரவிக்குமார், மங்கை எம்.சங்கர், மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், மலர்விழிதிருமாவளவன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், ஞான. இமையநாதன், ப.முருகமணி, பஞ்சு.குமார், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், அ.காந்தி, நத்தம் ஏ.வின்சென்ட், எம்.பி.கென்னடி, பேரூர் கழகச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துராஜா, எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம். கே.மருது, வி.எஸ்.என்.செந்தில், இரா.மனோகரன், இரா.முருகன், தீபாசத்தியேந்திரன், பெரு.வீரமணி, டி.ராஜ்குமார், இரா.தன்ராஜ், வெடி எஸ்.பாலமுருகன், மா.வைத்தியநாதன், க.அன்புச்செல்வன், வி,எஸ். பிரபாகர், கே.விக்னேஷ், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர்கள் க.சுரேஷ், தியாக.விஜயேஸ்வரன், வி.ஜெயபிரகாஷ் மற்றம் விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

50 ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்த காரர், பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், துணை பொதுச்செயலாளர், இளைஞர் அணி மாநில செயலாளர், கழக பொருளாளர், கழக துணைத்தலைவர், கழகத்தலைவர் என்றும், பொது வாழ்க்கையில் சென்னை மேயர், சட்ட மன்ற உறுப்பினர், அமைச்சர், துணை முதல்வர், முதல்வர் என உழைப்பால் உயர்ந்த கழகத் தலைவர், திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின்அவர்களின் பிறந்த நாள் வரும் மார்ச் 1ம் தேதி அன்றும் மற்றும் மாதம் முழுவதும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் கழகத்தலைவரை வாழ்த்தி சுவர் விளம்பரம் எழுதியும், கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உணவு, உடை வழங்கியும்,ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பொதுக் கூட்டம், தெரு முனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தியும், மருத்துவ முகாம், இரத்ததான முகாம் நடத்தியும், மரக்கன்றுகள், நட்டும், வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும் எழுச்சியுடன் சிறப்பாகக்கொண்டாடுவது என்றும் ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழகச்செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும், தளபதி பிறந்த நாள் விழாவில் மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டுகழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும், .தமிழ்நாட்டில் அத்து மீறும் ஆளுநர் ரவியை கண்டித்து மயிலாடுதுறையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கெள்ளும் ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியின் நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்த ஒன்றிய மோடி அரசை கண்டித்து மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றியம் பாலையூரில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்ட ம் ஆகியவற்றில் கலந்து கொண்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னான், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் ஒன்றிய அரசு நீட் தேர்வு, க்யூட் தேர்வு, தேசியக் கல்வி கொள்கை, யூ.ஜி.சி.2025 வரைவு விதி முறைகள் என தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் மாநில உரிமைகளை சிதைக்கும் வகையில் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையை பறிக்கும் விதமாக செயல்பட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தற்போது உயிரிலும், உணர்விலும் கலந்துள்ள தாய்த்தமிழை அழித்து இந்தியை திணிக்கும் மும்மொழி கொள்கையை கட்டாயமாக்கும் பாசிஸ்ட்டுகளின் வஞ்சக செயல் திட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கெள்வது என்றும், மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்தி திணிப்புக்கு எதிராக வீடுகளின் வாசலில் இந்தித் திணிப்பை எதிர்ப்போம், தமிழ் வாழ்க என்ற வாசக கோலங்கள் இடவேண்டும் என்றும், ஒன்றிய பா.ஜ.க. அரசு மும்மொழி கொள்கையை ஏற்றால் தான் நிதி தருவோம் என்று பிளாக்மெயில் செய்து அரசியல் செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திராபிரதான் க்கும் மயிலாடுதுறை தி.மு.க. சார்பில் வன்மையாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு உடனடியாக ஒன்றிய அரசு தமிழக கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய ரூ. 2152 கோடி கல்வி நிதியை உடன் வழங்கிட வேண்டும் என்றும்

2026 சட்ட மன்ற தேர்தலில் கழகத்தலைவர் தலைவர் அவர்கள் இலக்கான 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெல்வோம் என்ற இலக்கை எட்டும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளுக்கு அறிவிக்கும் வேட்பாளர் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற செய்திடும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி கழகத்தினர் திண்ணை பிரச்சாரத்தை தொடங்கிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ஏற்பாட்டில் ராஜகோபாலபுரத்தில் அமைந்துள்ள அரசு பள்ளியில் மாணவர்களுக்கான ஸ்மார்ட் டி.வி. வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சி புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா முன்னிலையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர்கள் பி.ராஜேஸ்வரி , எஸ்.எஸ். கருப்பையா, மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் ராய .முத்துக்குமார், சின்னையா சத்தியமூர்த்தி , தென்னரசு, அரவிந்த், சதீஷ்,செல்லப்பன் , மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் வே.ராஜேஷ் , மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சி.அரங்கநாயகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மு.கலைஞர் கருணாநிதி , தெய்வானை, ராயல் சபா , முரளி, எழில் ராஜா ,வட்டக் கழக செயலாளர் மு.ராஜதுரை, ஆனந்த், கதிரேசன், பிரபு, ரமேஷ், நவீன், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேந்திரன், மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைமையின் அறிவிப்பின்படி, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் பரமத்தி வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தியை மீண்டும் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமித்து அறிவித்திருந்தார். புதியதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் திமுக தலைமைக் கழக உறுப்பினர் ஆர்.நடேசன், நகரக் கழகச் செயலாளர் தா.கார்த்திகேயன், திருச்செங்கோடு நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ் பாபு மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கோ.வி.செழியன் பங்கேற்பு!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

தஞ்சாவூர் பிப்.24-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் 22.02.2025 மாலை 4.00 மணிக்கு கும்பகோணம் மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினா செ.இராமலிங்கம், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, எஸ். துரைமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனை தொடர்ந்து தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

இதில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, மாநிலக் கழக நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன் மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மார்ச்-1ல் 72வது பிறந்த நாள் காணும் மண்ணின் மைந்தன் கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வெற்றியை குவித்து வரும் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக செயல்படும் ஆளுநர் மற்றும் அவதூறு பரப்பும் மக்கள் விரோத சக்திகளை முறியடித்து மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி நல்லாட்சி நடத்திவரும் தாங்கள் இதே உற்சாகத்துடன் மக்கள் பணியை மென்மேலும் தொடர தஞ்சை வடக்கு மாவட்டத்தின் சார்பில் பிறந்தநாள் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறது. மாண்புமிகு தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் சுவர் விளம்பரங்கள் செய்தும், ஏழை எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் முதியோர் இல்லங்களுக்கு உதவிகள் அறுசுவை உணவு வழங்கியும், மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இரத்த தான முகாம்கள் நடத்தியும், பொது கூட்டங்கள் நடத்தியும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி கிளை கழகங்கள் தோறும் சிறப்பாக கொண்டாடுவது,

ஒன்றிய அரசு மும்மொழிக்கொள்கையை ஏற்றால்தான் பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவோம் என்று மிரட்டும் விதமாக தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதியை முழுமையாக நிறுத்தி வைத்திருக்கிறது. 'இந்தித் திணிப்பை ஒரு போதும் ஏற்க மாட்டோம்' என்று கழகத்தலைவர் அவர்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார். இந்தி திணிப்பை ஒன்றிய அரசு மேற்கொள்ளும் போதெல்லாம் தமிழ்நாடு ஒன்றிணைந்து எதிர்த்து வந்திருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, தற்போதைய இந்தித் திணிப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கூறி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்து வகையில் 28.02.2025 வரை மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக அளவில் பின்வரும் எளிய நிகழ்ச்சிகளை அடுத்தடுத்து நடத்த வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது. 'இந்தித் திணிப்பை எதிர்ப்போம்' என்ற வாசகத்துடன் கோலமிட செய்து, பொதுமக்களை சந்தித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், பேருந்து நிறுத்தங்கள்- ஆட்டோ நிறுத்தங்களில் "இந்தி திணிப்பை நிறுத்து" என்ற பதாகைகளை நிறுவுவதுடன் ஆட்டோக்களிலும் வாகனங்களிலும் அவர்கள் அனுமதியுடன் ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும்.

எளிய வாசகங்களுடன் துண்டறிக்கைகளை அச்சடித்து வீடு வீடாக வழங்குவதுடன் இளைஞர்கள், மாணவர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், வர்த்தகர்கள் போன்ற அமைப்பினருடன் நிகழ்ச்சி நடத்துவதுடன் இலக்கிய அணி, கலை இலக்கிய அணி போன்ற அணியினர் சிறிய நாடகங்கள், தெருமுனை பிரச்சாரங்கள் மூலம் மக்களிடம் கொண்டு செல்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிப்ரவரி 28 ஆம் தேதி வரையிலும் இத்தகைய எளிமையான செயல்பாடுகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிழற்படங்களையும் - வீடியோக்களையும் 9042762298 என்ற எண்ணுக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட BLC கையேடுகளை பூர்த்தி செய்தும் மற்றும் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி சார்பு அணி நிர்வாகிகள் பட்டியலை உடனடியாக தயார் செய்து பொறுப்புகள் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கி பட்டியலை அந்தந்த மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்களிடம் அணி அமைப்பாளர்கள் பெற்று வழக்கம் போல யுனிக்கோடு பான்டில் தட்டச்சு செய்து பென்டிரைவ் மூலம் இந்த மாதம் இறுதிக்குள் வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட BLC கையேடுகளை பூர்த்தி செய்தும் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தும் 100 நபர்களுக்கு ஒருவர் என்றும் BLCயிடம் வாக்காளர் பட்டியல் இருத்தல் வேண்டும் மற்றும் பூத் BLA-விடம் ஒரு வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும். கழக பொறுப்பாளர்கள் ஒரு பொறுப்புக்கு மேல் வைத்துக்கொண்டு இருப்பவர்களை கண்டு அவர்களுக்கு பதிலாக வேறு ஒரு நபரை நியமிக்கவும் இறப்பினால் அல்லது வெளியூர் சென்றதால் காலியாக உள்ளதும் அல்லது செயல்படாமல் இருப்பவர்களை நீக்கியும் பட்டியலை உடன் வழங்க வேண்டும்.

சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் பொது இடங்கள் மற்றும் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பேரூராட்சி, ஊராட்சி இடங்களில் அரசுக்கு சொந்தமான இடங்களில் அரசியல் கட்சியின் கொடிக்கம்பங்கள் இருப்பின் அதனை உடனடியாக அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வழிகாட்டுதல் சொல்லப்பட்டுள்ளதால் உடனடியாக மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் ஏற்கனவே உள்ள பல கொடி மர கம்பங்களை அதன் அமைப்பு மற்றும் கல்வெட்டுகள் மாறாமல் நமது கழக தோழர்களின் சொந்த இடங்களில் மாற்றி அமைத்துக்கொள்ளவும்,

ஒன்றிய அரசின் புதிய கல்வி கொள்கையை தமிழக அரசு ஏற்றுக்கொண்டால் தான் கல்வித்துறைக்கான ரூ.5100 கோடி நிதியை விடுவிப்பேன் என்று மிரட்டுகிற வகையில் பேசிய ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களின் செயலுக்கு பதில் அளித்த தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் மற்ற கழக தோழர்களையும், கழகத்தையும் ஒருமையில் சாடுகின்ற வகையில் பேசிய தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலைக்கு இக்கூட்டத்தின் வாயிலாக கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

### இரங்கல் தீர்மானம்

கழக மூத்த முன்னோடியும் மாவட்ட கழகம், ஒன்றிய கழகங்களில் துணைச் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றியவரும், நாடகங்கள் மற்றும் கழக பிரச்சாரங்களில் கடைசி வரை இருந்து பணியாற்றிய மணிமொழி நம்பி அவர்கள் மறைவிற்கு அவரது குடும்பத்தினருக்கும், கழக தோழர்களுக்கும் தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

தஞ்சை தெற்கு மாவட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் கிருஷ்ணசாமி அவர்களின் மனைவி ராஜேஸ்வரி அம்மையார் அவர்களின் மறைவிற்கு தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.



பேராவூரணியில் நடைபெற்ற தாய்மண் பாலம், கெயின் ஸ்போர்ட்ஸ் அகாடமி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட தடகள சங்கம் இணைந்து நடத்தும் மாநில அளவிலான தடகள போட்டியை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி தொடங்கி வைத்தார். இதில் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, புதுச்சேரி காவல்துறை துணைத் தலைவர் ஆர்.சத்திய சுந்தரம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருஞானசம்பந்தம், மகேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரூஸ்வெல்ட், அப்துல் மஜித், ஒன்றிய செயலாளர் இளங்கோவன் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.